**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No. 499/2021 |
| Deposition of witness for Prosecution | : P.W – 4 |
| Name | : ரமேஷ், வயது 35 |
| Father Name/Husband Name | : மாரியப்பன் |
| Village | : கோவில்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : நகராட்சி ஊழியர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of April 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து நகராட்சியில் பணி செய்கிறேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.
2. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள (பார்வை மகஜரில்) முதலாவது கையொப்பம் என்னுடையத தான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**
3. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள (அத்தாட்சியில்) முதலாவது கையொப்பம் என்னுடையது தான். (**அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த கையொப்பம் எதற்கு செய்தேன் என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)**

1. கடந்த 11.03.2021 ஆம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் நீங்களும் முருகன் என்பவரும் சுப்பிரமணியாபுரம் 3 வது தெருவில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த கிழக்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் நிலைய குற்ற எண்.168/2021 வழக்கு சம்பந்தமாக உங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை

மின்விளக்கு மற்றும் டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்றால் இல்லை.

2. மேற்படி ஆவணங்களில் நீங்களும் முருகன் என்பவரும் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் விட்டு தற்போது பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. பின்னர் அதிகாலை 03.15 மணியளவில் சம்பவ இடத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய சுத்தியல் ஒன்றை போலிசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும் அதில் நீங்கள் இருவரும் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.